**13.03.2024 அ.வ.எண்.37/2002 வா.சா.2, கணபதி த/பெ. பொன்னாச்சாரி**

**குறுக்கு விசாரணை**

எனது தாயார் பெயர் எல்லம்மாள் என்பது சரிதான். என் தாயாரின் தந்தை பெயர் குமாரசாமி ஆச்சாரி. வாதி மண்ணு ஆச்சாரி எனது பெரிய தந்தை. எனது தாய்வழி பாட்டனார் குமாரசாமி மகன் கோவிந்தராஜ் ஆச்சாரிதான் வாதிக்கு கிரயம் கொடுத்தவராவார். எனது தாய்வழி பாட்டனாருக்கு கோவிந்தராஜ் மற்றும் எனது தாயார் மற்றும் ஒரு மல்லிகா ஆகியோர் பிள்ளைகள் ஆவர். குமாரசாமி தனக்கு பாகபிரிவினையில் கிடைத்த சொத்தை பொறுத்து ஏற்பாடு எதுவும் செய்துவைக்காமல் இறந்துவிட்டார். அவர் 1988-ல் இறந்தார். குமாராசாமி ஆச்சாரிக்கு துரைசாமி ஆச்சாரி இளைய சகோதரர் ஆவார். துரைசாமி ஆச்சாரியின் மகன்கள் நடராஜன் மற்றும் சிவபிரகாசம் என்பது சரிதான். 24.06.1985-ல் நடைபெற்ற பாகபிரிவினை பற்றி எனக்கு தெரியும். அப்போது எனக்கு வயது 20 இருக்கும். அந்த பாகபிரிவினையில் சொத்துக்களை அளந்துதான் பாகம் பிரித்தார்கள். வழக்கு சொத்து கம்மாள தெருவில் தென்வாடையில் உள்ளது என்பது சரிதான். பாகபிரிவினையில் கிழமேல் ஆக கீழ்புரம் ஒதுக்கப்பட்ட சொத்து கிழமேல் ஏழரை கஜம் தென்வடல் நாற்பத்தைந்து கஜம் என அளவு கண்டு பிரிக்கப்பட்டது என்பது சரிதான். மீதம் இருந்த கிழமேல் பன்னிரண்டு கஜத்தில் நடராஜன் மற்றும் சிவபிரகாசத்திற்கு கிழமேல் தலா ஆறு கஜம் தென்வடல் தலா நாற்பத்தைந்து கஜம் என அளவு கண்டு பிரிக்கப்பட்டது என்பது சரிதான். முதலில் குமாரசாமிதான் தனது பாகத்தை கிரயம் கொடுத்தார் என்பது சரிதான். சிவபிரகாசம் தனது பாகத்தை இரண்டு கிரயப்பத்திரங்கள் மூலம் 1-ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்தார் என்பது சரிதான். குமாரசாமி பாகத்திற்கு மேற்கிலும் சிவபிரகாசம் மற்றும் நடராஜன் பாகத்திற்கு கிழக்கிலும் இரண்டிற்கும் மத்தியில் ஒரு பொது கிணறு உள்ளது என்பது சரிதான். அந்த பொது கிணற்றில் மேற்படி மூவரும் நீர் இறைத்துக்கொள்ளலாம் என்பது சரிதான். அந்த பொது கிணறு நான் பிறப்பதற்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. அவ்வாறு பொது கிணறு மேற்படி மூவருக்கும் பொதுவானது என்பதையும் மூவராலும் அனுபவிக்கப்படுகிறது என்பதையும் பாகபிரிவினை பத்திரத்தில் குறிப்பிட்டு எழுதவில்லை என்பது சரிதான். பாகபிரிவினைக்கு பிறகும் மேற்படி மூவரும் பொது கிணற்றை அனுபவித்து வந்தனர் என்பது சரிதான். அந்த கிணற்றிற்கு பொது வழி கம்மாள தெருவிலிருந்து தெற்கு நோக்கி அமைந்துள்ளது. அந்த பாதை சுமார் 60 அடி நீளம் ஆகும். அதன் அகலம் 1.6 மீட்டராகும். அந்த பொது வழி பற்றியும் பாகபிரிவினை ஆவணத்தில் குறிப்பிட்டு எழுதவில்லை என்பது சரிதான். பாகபிரிவினை ஆவணத்தில் கண்ட ஏ அட்டவணை சொத்தான குமாரசாமி பாகத்தையும் பி அட்டவணை சொத்து சிவபிரகாசம் பாகத்தையும் அளந்தால் இரண்டிலும் கிணறும் பொது வழியும் பாதி பாதியாக அமைந்திருக்கும் என்பது சரிதான். அந்த கிணற்றிலிருந்துதான் மேற்படி மூவரும் தங்களது வீட்டிற்கு பின்புறமுள்ள தோட்டங்களுக்கு நீர் இறைத்து தோட்ட பயிர் செய்தனர் என்பது சரிதான். பாகபிரிவினையின் போது பாக சொத்துக்களில் வீடு எதுவும் இல்லை காலியாகதான் இருந்தது. கோவிந்தராஜ் வாதிக்கு கிரயம் கொடுத்தபோது பட்டா இருந்ததா என கேட்டால் கோவிந்தராஜ் பெயரில் பட்டா இருந்தது. அவர் வாதிக்கு கிரயம் கொடுத்தபோது பட்டா படி அளந்து கொடுத்தார். பட்டா படி கோவிந்தராஜ் பாக சொத்து கிழக்கு மேற்கு 20 - 1/2 அடி இருந்தது. பாகப்பத்திர படி 22 - 1/2 அடி இருக்க வேண்டும் என்பது சரிதான். பட்டா படி கிரயம் கொடுக்கப்பட்டிருந்தால் அது கிழமேல் வடபுறம் 20 - 1/2

அடி என்றுதான் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது சரிதான். கிணறு கிழமேல் 10 அடி தென்வடல் 10 அடி என்ற அளவிலுள்ளது. கிணறு மற்றும் பொது வழியை தனியாக உட்பிரிவு செய்து மூவர் பெயரிலும் கூட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பது சரிதான். கிணற்றிற்கு தென்புறம் உள்ள மீத பகுதியில் கிழக்கு மேற்கு 22 - 1/2 அடிக்குதான் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்பது சரிதான். கோவிந்தராஜ் வாதிக்கு கிழக்கு மேற்கு 23 - 1/2 அடி வடக்கு தெற்கு 140 அடி என குறிப்பிட்டு கிரய ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார். பாகப்பத்திர அளவுகளை காட்டிலும் கிழ மேல் 1 அடியும் தென் வடல் 5 அடியும் கூடுதலாக கோவிந்தராஜ் கிரயம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் ஆமாம் அந்த அளவுகள்தான் பட்டாவிலுள்ளது. அந்த பட்டா இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என கேட்டால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி எந்த அளவுகளுக்கு வழக்கிட்டுள்ளார் என கேட்டால் அவர் கிரயப்பத்திரபடி கிழமேல் 23 - 1/2 அடி வாங்கியுள்ளார். அந்த அளவிற்குதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி மற்றும் 1-ம் பிரதிவாதி கிரய சொத்துக்கள் பலமுறை அளக்கபட்டுள்ளன என்ற விவரம் எனக்கு தெரியும். 1-ம் பிரதிவாதி இரண்டாம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்தபோது நடராஜ ஆச்சாரியும் சேர்ந்து கிணறு பாகத்திற்காக எழுதிக் கொடுத்துள்ளார் என்பது சரிதான். பட்டா படி சிவபிராகாசம் மற்றும் நடராஜன் பாகத்திற்கு கிழமேல் தலா 5 மீட்டர் வருகிறது என்பது சரிதான். மேற்படி 10 மீட்டர் என்பது பாகபிரிவினை ஆவணத்தின்படி வரவேண்டிய 12 கஜம் என்பதைவிட குறைவு என்பது சரிதான். நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை அளந்தபோது கிணறு மற்றும் பொதுவழியை மட்டும்தான் அளந்தார் என்பது சரிதான். நீதிமன்ற ஆணையர் கிணற்றிற்கு கிழக்கு, மேற்கு மற்றும் தெற்கிலுள்ள இடங்களை அளக்கவில்லை என்பது சரிதான். 1-ம் பிரதிவாதி கழிவறை கட்டியுள்ளதாக சொல்லும் இடம் கிணற்றை ஒட்டி மேற்கு புறம் உள்ளது. அந்த கழிவறை பாகப்பத்திரபடி சிவபிரகாசம் பாகத்தில் உள்ளது என்பது சரிதான். சிவபிராகாசத்தின் பாகத்தை ஏற்கனவே வாதி கிரயம் கேட்டார் என்பது சரியல்ல. நான் சொல்வது பொய் என்றும் சிவபிராகாசம் தனக்கு கிரயம் கொடுக்கவில்லை என்பதனால் வாதி தவறான அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது சரியல்ல. பொது கிணற்றில் தற்போது நடராஜன் நீர் எடுப்பது இல்லை என்பது சரிதான்.